**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், உத்திரமேரூர்.**
**முன்னிலை:** Ms. R. கிருத்தியா, B.A.,LL.B.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்

**2026 –ம் ஆண்டு ஜூலை மாதம் 23–ம் நாள் வியாழக்கிழமை**

**MC No.3/2023**

1. புவனேஷ்வரி
2. மைனர். ஜெயஸ்ரீபிரியா
(மைனர் மனுதாரருக்கு கார்டியனாக அவரது தாயார் 1ம் மனுதாரர்)

…….. மனுதாரர்

//எதிர்//

ராமமூர்த்தி

….. எதிர்மனுதாரர்

இம்மனு 18.08.2023 ம் தேதி கோப்புக்கு எடுக்கப்பட்டு 13.07.2026 ம் தேதி என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. G. குமார், அவர்கள் முன்னிலையாகியும். எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M. கோட்டீஸ்வரன், திரு. R. அஜீஸ், திரு. M. எழில்செல்வன், ஆகியோர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

1. மனுதாரர்கள் தரப்பில் குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 125 ன் கீழ் பராமரிப்பு தொகை வழங்க கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்**

மனுதாரருக்கும் எதிர்மனுதாருக்கும் பெரியோர்கள் நிச்சயித்தப்படி கடந்த 27.05.2018 ம் தேதியில் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு பிறகு

மனுதாரரும் எதிர்மனுதாரரும், எதிர்மனுதாரரின் வீட்டில் குடும்பம் நடத்திவந்தனர். மனுதாரருக்கு 7,00,000 செலவில் மனுதாரரின் குடும்பத்தாரால் திருமணம் செய்யப்பட்டது. மனுதாரரும் எதிர்மனுதாரரும் நல்ல முறையில் குடும்பம் நடத்தி வந்த நிலையில் மனுதாரர் கர்ப்பம் தரித்து 6 மாதத்தில் அவருக்கு சிறுநீரக கல் பிரச்சனையினால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இதற்கு எதிர்மனுதாரர் எந்த செலவையும் ஏற்றுக் கொள்ளவில்லை. மனுதாரரின் தந்தையே அனைத்து செலவுகளையும் மேற்கொண்டார். இந்நிலையில் மனுதாரருக்கு ஆண் குழந்தை பிறந்து அக்குழந்தை இறந்து விட்டது. அதற்கு எதிர்மனுதாரரின் பொறுப்பின்மையே காரணம். மனுதாரரின் மருத்துவ சிகிச்சை தேவைப்பட்டதால் எதிர்மனுதாரர் மனுதாரரை அவரது தாய் வீட்டிலேய விட்டு விட்டு சென்று விட்டார். அவரை பராமரிக்கவில்லை. இந்நிலையில் மீண்டும் மனுதாரர் எதிர்மனுதாரருடன் சென்று வாழ்ந்து வந்த நிலையில் அவர் மீண்டும் கர்ப்பமடைந்து 2ம் மனுதாரர் பிறந்தார். ஆனால் எதிர்மனுதாரர் மனுதாரரையோ, 2ம் மனுதாரரையோ கவனிக்க தவறிவிட்டார். இதனால் மனுதாரர் அவரது தாய் வீட்டிற்கு சென்றுவிட்டார். இந்நிலையில் எதிர்மனுதாரர் மனுதாரர் மீது விவாகரத்து கோரி வழக்கு தொடுத்தார். ஆனால் மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பம் தெரிவித்ததால் மனுதாரரை மிரட்டி அந்த வழக்கிற்கு செல்லவிடாமல் தடுத்தார். இந்நிலையில் மனுதாரர் தன்னையும் பராமரிக்க முடியாமல் 2ம் மனுதாரரையும் பராமரிக்க முடியாத சூழ்நிலையில் உள்ளார். எதிர்மனுதாரர் AMG புளூமெட்டல் கம்பெனி வைத்தும், டிராவல்ஸ் வைத்தும் நடத்தி வருகிறார். எனவே மேற்படி மனுதாரர் எந்தவொரு வேலையும் வருமானமும் இன்றி மிகவும் சிரமப்பட்டுகொண்டிருக்கிறார். மனுதாரர்களை பாதுகாத்து, பராமரிக்கும் கடமை எதிர்மனுதாரருடைய சட்டப்படியான கடமையாகும். மனுதாரர்கள் அன்றாடம் உணவிற்காகவும், உடை, மருத்துவம்

உள்ளிட்ட செலவிற்காகவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கின்றார். அவருக்கு அனைத்து செலவுகளையும் எதிர்மனுதாரர் அளிக்க கடமைப்பட்டவர் ஆவார். மனுதார்களின் உணவு, இருப்பிட வசதி, மருத்துவம் மற்றும் உடைகள் முதலானவற்றிற்காக மாதம் ரூபாய்.20,000/– மாதாந்திர செலவுகளுக்காக எதிர்மனுதாரர் பராமரிப்பு தொகை வழங்க உத்தரவிடவேண்டும் என்று மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு உண்மைக்கு புறம்பாகவும், பொய்யான சங்கதிகளையும் கூறி தாக்கல்செய்துள்ளபடியால் தள்ளுபடி செய்யவேண்டியது. திருமணத்தின் போது எதிர்மனுதாரர் 4,00,000 ரூபாய் செலவு செய்துள்ளார். மனுதாரர் திருமணமான பிறகு வீட்டு வேலைகளை செய்யாமல் எதிர்மனுதாரரை செய்ய சொல்லி துன்புறுத்தினார். வீட்டில் சமைக்காமல் எப்போதும் ஓட்டலில் வாங்கி வர சொல்லி வற்புறுத்தினார். ஓட்டலில் வாங்கி வராத நாட்களில் எதிர்மனுதாரரையும் அவரது குடும்பத்தாரையும் இழிவுபடுத்தி பேசினார். மனுதாரர் கர்ப்பமான சமயத்தில் அவருக்கு சிறுநீரக கற்கள் பிரச்சனை ஏற்பட்டதால் எதிர்மனுதாரர் அவரை ஜிப்மர் மருத்துவமனையில் சேர்த்து அனைத்து செலவுகளையும் செய்து வந்தார். மருத்துவர்களின் பேச்சை கேட்காமல் மனுதாரர் அவரது ஊரில் பிரசவம் பார்த்ததால் பிறந்த குழந்தை சுகவீனம் காரணமாக இறந்து விட்டது. இதை கூறியதற்கு மனுதாரர் எதிர்மனுதாரரிடம் சண்டை போட்டார். அதன்பின்பு தங்களுக்கு 2ம் மனுதாரர் பிறந்ததாகவும், 2ம் மனுதாரர் உடல்நிலை சரியில்லாத போது எதிர்மனுதாரர் தான் அனைத்து சிகிச்சைகளுக்கான செலவுகளையும் செய்து வந்ததாகவும், மனுதாரர் அவரது பெற்றோரின் பேச்சை கேட்டு எதிர்மனுதாரருடன் வாழாமல் சென்றுவிட்டதாகவும், இதனால் எதிர்மனுதாரர் விவாகரத்து கேட்ட போது மனுதாரர் ரூ.5,00,000 பெற்றுக்கொண்டு செட்டில்மெண்ட் எழுதிக்

கொடுத்துவிட்டதாகவும், இந்நிலையில் எதிர்மனுதாரரை மனஉளைச்சலுக்கு ஆளாக்கவேண்டும் என்ற எண்ணத்தில் மீண்டும் மனுதாரர் இம்மனுவை தொடுத்து உள்ளதாகவும், எதிர்மனுதாரர் கல்குவாரியில் கூலி வேலை செய்து வருவதாகவும், தங்களுக்குள் ஏற்கனவே செட்டில்மெண்ட் ஆகிவிட்டதால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்பதே ஆகும்.**

**4. தீர்வு**

மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆகவும், ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு எ.ம.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

இருதரப்பு வழக்கறிஞர்களின் வாய்மொழி விவாதம் கேட்கப்பட்டது. சாட்சி, சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் மனுதாரரையும் 2ம் மனுதாரரையும் கவனிக்க தவறிவிட்டதாகவும், அவர்களுக்கான செலவுகளை ஏற்க மறுத்து விட்டதாகவும், எதிர்மனுதாரர் திண்டிவனம் சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து கேட்டு வழக்கு தாக்கல் செய்து மேற்படி எதிர்மனுதாரரின் மிரட்டலால் மனுதாரரால் அந்த வழக்கில் முன்னிலையாகாமல் மேற்படி வழக்கு விவாகரத்து வழங்கப்பட்டு விட்டதாகவும், மனுதாரர் அன்றாட வாழ்க்கைக்கே மிகவும்

சிரமப்பட்டு வருவதாகவும், மனுதாரர் தன்னைத் தானே பராமரித்துக் கொள்ள முடியாத சூழ்நிலையில் 2ம் மனுதாரரையும் பராமரிக்க முடியாத சூழ்நிலையில் உள்ளதாகவும், எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு பராமரிப்பு தொகை வழங்க வேண்டும் என வாதிடப்பட்டது.

எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என்றும், மனுதாரர் திருமணமானது முதல் சண்டையிட்டு தன்னை கொடுமைப்படுத்தினார் என்றும், அதனால் எதிர்மனுதாரர் திண்டிவனம் சார்பு நீதிமன்றத்தில் HMOP வழக்கு தொடுத்ததாகவும், அதன்பேரில் மனுதாரருடன் பெரியோர்கள் பேசி சுமுகமான முறையில் தங்களுக்குள் செட்டில்மெண்ட் செய்யப்பட்டு மனுதாரர் 5 லட்ச ரூபாயை செட்டில்மெண்டாக பெற்றுக்கொண்டு, மனுதாரர் வருகையின்மையால் அந்த வழக்கு அனுமதிக்கப்பட்டு விட்டதாகவும், எதிர்மனுதார் கல்குவாரியில் கூலி வேலை தான் செய்து வருவதாகவும், மனுதாரர் ஏற்கனவே செட்டில்மெண்டாக 5,00,000 பெற்றுக்கொண்டு விட்டதால் மனுதாரருக்கு ஜீவனாம்சம் பெற தகுதியில்லை என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டது.

மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் இந்துமுறைப்படி திருமணம் நடைபெற்றது என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாகும். இருதரப்பிலும் ஒருவருக்கொருவர் பரஸ்பரமாக குற்றம் சாட்டிக் கொண்ட சங்கதிகளை எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட விவாகரத்து வழக்கில் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளனர். மேற்படி விவாகரத்து மனுவில் குறிப்பிட்டிருந்த சங்கதிகளை தவிர கூடுதலாக புதியதாக எந்த சங்கதிகளும் இந்த மனுவில் இருதரப்பிலும் குறிப்பிடவில்லை. மேற்படி குற்றச்சாட்டுக்களுக்கும் இந்த மனுவிற்கும் சம்மந்தமில்லை.

மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் கல்குவாரி கம்பெனி நடத்தி சம்பாதிப்பதாக குறிப்பிட்டுள்ளார். மேற்படி இருதரப்பிலும் அவர்களுடைய வருமானத்தை பற்றி தகுந்த ஆவணங்கள் கொண்டு நிரூபிக்கவில்லை. இருதரப்பிலும் சொத்து மதிப்பு பிராமாண வாக்குமூலம் தாக்கல் செய்யவில்லை.

மனுதாரர் ஏற்கனவே பெரியோர்கள் முன்னிலையில் 5,00,000 செட்டில்மெண்ட் பெற்றுக் கொண்டு விட்டதால் மனுதாரருக்கு ஜீவனாம்சம் கொடுக்க முடியாது என்று எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்வாதம் செய்யப்பட்டு வருகிறது. மனுதாரருக்கு செட்டில்மெண்ட் வழங்கப்பட்டுவிட்டது என்றும், அதனால் எதிர்மனுதாரர் மனுதாரரை பராமரிக்க அவசியமில்லை என்ற எதிர்வாதத்தை பொறுத்து எதிர்மனுதாரர் தரப்பில் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டது. அவற்றை பரிசீலனை செய்கையில் அவை புகைப்படம் மற்றும் அவர்களுக்குள் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தமும் ஆகும். மேற்படி ஒப்பந்தம் பதிவு செய்யப்படாத ஒன்று, புகைப்படம் பணம் கொடுப்பது போன்று உள்ள போதிலும் எந்த காரணத்திற்காக பணம் கொடுக்கப்படுகிறது என்ற சந்தேகம் எழுகிறது. எனவே மேற்படி எதிர்வாதம் நிராகரிக்கப்படுகிறது. மேற்படி காரணங்களுக்காக இந்த வழக்கில் இருந்தும் மனுதாரர்களை பராமரிப்பதில் இருந்து எதிர்மனுதாரர் தப்பித்துக் கொள்ள முடியாது.

எதிர்மனுதாரர் திண்டிவனம் சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்து மேற்படி விவாகரத்து வழக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இதனால் மனுதாரரை பராமரிக்க வேண்டிய கடமையிலிருந்து எதிர்மனுதாரர் தப்பிக்க முடியாது. குவிமுச பிரிவு 125 ன்படி தன்னைத்தானே பராமரித்துக் கொள்ள இயலாத மனைவி மற்றும் குழந்தைகளை கணவர் பராமரிக்க வேண்டும் என்று விவரிக்கிறது. எதிர்மனுதாரர் தன்னுடைய சட்டப்படியான

கடமைகளிலிருந்து தப்பிக்க முடியாது. எனவே இந்த மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

மனுதாரர் தன்னுடைய மனுவில் மனுதாரருக்கு ஜீவனாம்சமாக உணவு, உடை மற்றும் மருத்துவ செலவிற்காக மாதம் ரூ.20,000/- என்று மனு செய்திருந்தாலும், எதிர்மனுதாரரின் வேலையை கருத்தில் கொண்டும், பொருளாதார சூழ்நிலையை கருத்தில் கொண்டும், மனுதார்களுக்கு உணவு, உடை மற்றும் மருத்துவசெலவிற்காக மாதம் ரூபாய். 15,000/- பராமரிப்பு தொகையாக வழங்குவதே சரியாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**5. இறுதியாக**

i. மனு அனுமதிக்கப்படுகிறது.

ii. மனுதார்ரகளுக்கு உணவு, உடை மற்றும் மருத்துவசெலவிற்காக மாதம் ரூபாய். 15,000/- மாதா மாதம் பராமரிப்பு தொகையாக வழங்க வேண்டும் என்று எதிர்மனுதாரருக்கு உத்தவிடப்படுகிறது.

iii. மேற்கண்ட பராமரிப்பு தொகையை மனுதாக்கல் செய்த தேதி முதல் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலுத்த வேண்டும் என்றும், மேலும் மேற்படி பராமரிப்பு தொகையை பிரதி ஆங்கில மாதம் 5 ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 23.07.2026 ம் தேதியில் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R KRITYA

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by R KRITYA
Location: UTHIRAMERUR
Date: 2026.07.23 15:25:20 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
உத்திரமேரூர்.

இணைப்பு

**மனுதாரர் தரப்பு சாட்சிகளின் பட்டியல்**

ம.சா.1 – புவனேஷ்வரி

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1 | ம.சா.ஆ.1 | திருமண அழைப்பிதழ் | நகல் |
| 2 | ம.சா.ஆ.2 | திருமண புகைப்படம் | நகல் |
| 3 | ம.சா.ஆ.3 | 1ம் மனுதாரரின் ஆதார் அட்டை | நகல் |
| 4 | ம.சா.ஆ.4 | 2ம் மனுதாரரின் வாக்காளர் அடையாள அட்டை | நகல் |
| 5 | ம.சா.ஆ.5 | 2ம் மனுதாரரின் மருந்து சீட்டு | நகல் |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகளின் பட்டியல்**

எ. ம.சா.1 – விநாயகமூர்த்தி

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**

| | | | |
|---|---|---|---|
| எ. ம.சா.ஆ.1 | 28.07.2023 | விவாகரத்து உத்தரவு | சான்றிட்ட நகல் |

R KRITYA

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by R KRITYA
Location: UTHIRAMERUR
Date: 2026.07.23 15:25:26 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்.
உத்திரமேரூர்.